# அகதிகள் வேதனை பொறுக்க முடியாத நிலையில் நாடு திரும்பியுள்ளனர்!

(சென்னை) தமிழகத்தில் தங்கியுள்ள அகதிகள் சொந்த விருப்பத்தின் பேரிலேயே இலங்கை திரும்புவதாக தெரிவிக்கப்பட்ட போதிலும், உண்மையில் அகதி முகாம்களில் தரப் (4-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 30 இதழ் 217
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 15 — 09 — 1992


## வவுனியா துப்பாக்கிச்சூடு: இளம்பெண் பலி

(வவுனியா) வவுனியா இலுப்பைக்குளம் பகுதியில் தமிழ்க் குழு ஒன்று நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளம் பெண் ஒருவர் துடிதுடித்து மரணமானார். இவரது தங்கை ஆபத்தான (4-ம் பக்கம் பார்க்க)

## நிவாரணம் வழங்க மாதாந்தம் 25 கோடி ரூபா தேவை

(கொழும்பு) வடக்கு கிழக்கில் அகதிகளுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்க மாதம் 25 கோடி ரூபா செலவாவதாக தெரிவிக்கப்படுகிறது. அமைச்சுக்கு ஏற்பட்டுள்ள (4ம் பக்கம் பார்க்க)

### திறைசேரி ஆலோசனையின் பேரில்

# பாரிய ராணுவ தளபாடங்களின் கொள்வனவு தவிர்க்க முடிவு?

(கொழும்பு)
மிகுந்த பொருட்செலவை ஏற்படுத்தும் பாரிய இராணுவத் தளபாடங்கள் எதனையும் கொள்வனவு செய்ய வேண்டாமென அரசாங்கம் முப்படை அதிகாரிகளையும் கேட்டுக் கொண்டுள்ளதாக அறியவருகிறது. நாட்டின் பொருளாதாரம் மந்த நிலையில் இருப்பதன் காரணமாகவே இத்தகைய ஒரு அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புப் படையினருக்குத் தேவையான விமானங்கள், டாங்கிகள், கடற்படைக் கப்பல்கள், பீரங்கி வகைகள் போன்றவற்றின் கொள்வனவுகளைப் பெருமளவு தவிர்த்துக் கொள்ளுமாறு நிதிஅமைச்சு அண்மையில் அரசுக்கு ஆலோசனை ஒன்றை தெரிவித்திருந்தது.

திறைசேரியில் நிதிவளம் பெரிதும் குறைந்திருப்பதாலும் அகதிகளுக்கான (4ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு போரில் 8000 படையினர் இதுவரை ஊனமுற்றுள்ளனர்

(கொழும்பு) வடக்கு-கிழக்கில் நடைபெறும் போரில் இதுவரை 8,000 படையினர் ஊனமுற்றுள்ளதாக இராணுவ தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன கூறியுள்ளார். (4ம் பக்கம் பார்க்க)

## நிவாரண வெட்டை மீள்பரிசிலனை செய்யுமாறு அரசுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்) இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த தமிழ மக்களின் நிவாரணத்தை அரசு குறைத்ததைக் கண்டித்து அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களின் (4-ம் பக்கம் பார்க்க)

### யாழ். குடாநாட்டில்

# பாரியராணுவ நடவடிக்கைக்கு அரசு அனுமதி மறுப்பு?

(கொழும்பு) யாழ் குடாவில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளப் படையினர் திட்டம் தயாரித்துள்ளபோதிலும், அதனைச் செயற்படுத்த அரசு அனுமதி மறுத்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாரிய பொருளாதார நெருக்கடியே இதற்குக் காரணம் எனத் தெரியவருகிறது. அகதிகளைப் பராமரிக்கும் செலவு தொடர்ந்து அதிகரித்து வருவதால், பல கோடி ரூபா இதற்குச் செலவிட வேண்டியுள்ளது. (4ம் பக்கம் பார்க்க)

## வலி-மேற்கிலிருந்து அரச ஆவணங்களை எடுத்துவர ஊழியருக்கு அனுமதி

(மானிப்பாய்) வலிமேற்குப் பகுதியில் கடந்த மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இளவாலை, மாதகல் சுளிபுரம், பண்ணாகம் வட்டுக்கோட்டை போன்ற இடங்களிலிருந்து வெளியேறிய (4ம் பக்கம் பார்க்க)

## இன்று தபால் விநியோகம்

(திருநெல்வேலி) குமண கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால் பொதிகள் தரம் பிரிக்கப்பட்டு, இன்று செவ்வாய்க்கிழமை முதல் விநியோகிக்கப்பட உள்ளன. இன்று காலை யாழ். நகரப் பகுதித் தபால்கள் விநியோகிக்கப்படும். [4ம் பக்கம் பார்க்க]

# தியாகி திலீபன் நினைவுநாள் இன்று முதல் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்) இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து, உண்ணாவிரதமிருந்து வீரச் சாவைத் தழுவிய தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சிகள் இன்று ஆரம்பமாகின்றன.

நினைவு தினத்தை அனுஷ்டிப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகளில் தமிழீழ மக்கள் ஈடுபட்டுள்ளன வீதிகள் தோறும் பந்தல்கள் அமைப்பதிலும், தியாகி திலீபனின் படங்களை வைத்து பூஜிப்பதிலும் மக்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

இன்று தொடக்கம் எதிர்வரும் 26ம் திகதி வரை யாழ். மாவட்ட வட்டவைதோறும் (4ம் பக்கம் பார்க்க)

## பென்சன் வவுச்சர்கள்

(மானிப்பாய்) செப்டெம்பர் மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்கள் நேற்று யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்தன

இவற்றை உரியவர்களுக்கு அனுப்பிவைக்கும் பணியில் ஓய்வூதியப் பிரிவு ஈடுபட்டுள்ளது. (71-ஸ)

## இராணுவத்திற்கு ஆள திரட்டல்: நேர்முகப் பரீட்சைக்கு இருவர் மாத்திரமே சமுகமளிப்பு

(கொழும்பு) இலங்கை இராணுவ தென் பிரிவுத் தலைமையகத்தில் நடைபெறவிருந்த இராணுவத்திற்கு ஆள்திரட்டல் நேர்முகப் பரீட்சை இறுதியில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மாத்தறையில் நடைபெறவிருந்த இந்த நேர்முகப் பரீட்சைக்கு இரண்டு பேர் மாத்திரமே வந்திருந்ததால் இத்தெரிவு ரத்துச் செய்யப்பட்டது.

இதேவேளை மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜயவிமலரட்ணவின் மறைவுக்குப்பின் கடமையிலிருந்து விடுமுறையில் செல்லும் சிப்பாய்கள் மீண்டும் கடமைக்குத் திரும்பாமல் தலைமறைவாகி விடுகின்றனர்.

இந்நிலைமை அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### அரசின தந்திர நடவடிக்கையால்

# ராமானுஜம்கப்பல்சேவையை இந்தியா நிறுத்தியது

(சென்னை) இராமேஸ்வரத்திலிருந்து இலங்கை அகதிகளை ஏற்றி வரும் ராமானுஜம் கப்பலில் இந்திய பாஸ்போர்ட்டுடன் இந்திய திரும்ப விரும்பாத இந்திய வம்சாவழியினரை இலங்கை அரசு திருப்பி அனுப்ப முயற்சித்ததனால் ராமானுஜம் கப்பல் சேவையை இந்தியா நிறுத்தியுள்ளது.

வாரா வாரம் இராமேஸ்வரத்திலிருந்து இலங்கை அகதிகளை ஏற்றி தலைமன்னாரிற்கு கொண்டு வர ஏற்பாடுகள் பூர்த்தியாகி இருந்தன. (4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வேப்பம் விதை

வேப்பம் விதை வாங்கு கிறோம். அண்ணா கோப்பிக் கடைகளிலும் ஏற்கப்படும். மில்க்வைற், யாழ்ப்பாணம். ஏ 2435)

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற் படும் நச்சுத்தன்மைகளுக்கு மாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ் ரி மெடிக்கல்ஸ், ஆஸ்பத் திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6799)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலயியம், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள்; மூதிரரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு யாழ்பாணம். (சி-6761)

# சென்னையிலிருந்து 1000 இல. 'தமிழ் அகதிகள் கப்பலில் அனுப்பிவைப்பு

(சென்னை)

தமிழகத்திலிருந்து சுமார் அயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று முன்தினம்' நிர்கோபார்' என்ற கப்பல் மூலம் சென்னையிலிருந்து திருகோணமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக தமிழக அரசின் முதன்மைஆணையாளர் சி. எம். ராமதாஸ் தெரிவித்தார்.

இதுவரை 25, 000க்கு மேற்பட்ட இலங்கை அகதிகளை கப்பல் மூலமும் விமான மூலமும் அனுப்பிவைத்துள்ளதாகவும் இனிமேல் அகதிகளை கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்படுவதால் விமானமூலம் அகதிகளை அனுப்புவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (சு)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



### அருளானந்தம் அமிர்தராஜ்
### (பரந்தாமன்)

தோற்றம்: 1976 - 1 - 14 வீரமரணம்: 1991 - 9 - 15

பயந்தோடிச் சாவதிலும் எதிரிமீது
பாய்ந்தடித்துச் சாகின்ற சாமேல்
என்று வயப்புலிகள் படைசேர்ந்த
பரந்தாமா ஆம் ஆனையிறவில்
அன்றி மணலாற்றிலுமே
புயல்போலச் சுழன்றடிப்
பகையைச் சாடிப் புகுந்தாய் நீ
விண் நாடு தேவன் ஆனாய்
அயராது தமிழ் வேங்கை
அடிபட்டு ஈழம் அமைத்துன்றன்
ஆன்மாவை மகிழ்த்தும் மைந்தா

இப்படிக்கு
அப்பா, அம்மா, சகோதரி, தம்பிமார்.
ஐயா, அம்மம்மா, மாமாமார், அன்ரிமார்.

தாவடி தெற்கு, கொக்குவில். [சி 6809]

## அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

உ
சாவகச்சேரி

# மஹா சண்டிஹோம அழைப்பு

அன்புடையீர்,

திருக்கணித பஞ்சாங்கப்படி வியாழனது மாற்றம் 11-9-92 அன்று ஏற்படுவதை முன்னிட்டு நாட்டின் நன்மை கருதியும், கீழே கொடுக்கப்பட்டுள்ள நக்ஷத்திரத்திற்குரிய தோஷம் உடையவர்கள் பங்குபற்றவும் மேலே குறிப்பிட்டுள்ள சண்டிஹோமம் சென்ற வருடத்திலும் பார்க்க வெகுசிறப்பாக நடைபெறும்.

**20-9-92 முதல் 22-9-92 வரை**

(ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை)

★ கணபதிஹோமம்
★ நவக்கிரகஹோமம்
★ துர்க்காஹோமம்
★ சண்டிஹோமம்

என்பன தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறும்.

தோஷமுடையவராக கருதப்படுவர்களது நட்சத்திரங்களாவன:

★ அசுவினி ★ பரணி ★ கார்த்திகை 1-ம் கால் ★ புனர்பூசம் 4-ம் கால் ★ பூசம் ★ ஆயிலியம் ★ உத்தரம் 2, 3, 4 ம் கால்கள் ★ ஹஸ்தம் ★ சித்திரை 1, 2-ம் கால்கள் ★ மூலம் ★ பூராடம் ★ உத்தராடம் 1-ம் கால் ★ அவிட்டம 3, 4-ம் கால்கள் ★ சதயம் பூரட்டாதி 1, 2, 3-ம் கால்கள்

இந்த உபயத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் கூடியவிரைவில் ஆலயத்தில் தொடர்புகொள்ளவும். அடியார்கள் அனைவரும் மூன்று நாட்களும் தொடர்ந்து காலை, மாலை பங்குபற்றி மூன்றும் நாள் காலை ஆயிரத்தெட்டு பால்செம்பு எடுதது அம்பிகைககு பாலபிஷேகம் செய்ய உதவுக.

இவ்வேள்வி சிறப்பாக நடைபெற அடியார்கள் தேவையான நிதியுதவி, தானியவகை, சமித்துவகை, கற்பூரம், தேங்காயெண்ணெய், பால், தயிர், பழவகை, பன்னீர், இளநீர், கரும்பு, சொரிபூ, பூமாலை என்பன கொடுத்துதவி, சரீரத்தொண்டுகள் புரிந்து அன்னை துர்க்காதேவியின் அருட்கடாட்சம் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

இத்தினங்களில்

## ★ அம்பிகையின் பெருமை ★

பற்றிய
சமயச்சொற்பொழிவுகள் இடம்பெறும்.

நிகழ்த்துபவர்:
மெய்ஞ்ஞானவாரிதி செஞ்சொற்கொண்டல்
பிரம்மஸ்ரீ சபாரத்ன ஈஸ்வரசர்மா அவர்கள்

அனைவரும் வருக! அன்னையருள் பெறுக!!

இங்ஙனம்
பிரம்மஸ்ரீ ப. மஹாகணபதி சர்மா
தர்மகர்த்தா

16-8-92 (சி-6770)

## அகதிகள் புனர்வாழ்வு வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்பரியோவான் கல்லூரி இன்ரறக்ற் கழகத்தினர் அகதிகள் புனர்வாழ்வு வாரம் (15-9-92—22-9-92) ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளனர். 15ம், 16ம் திகதிகளில் பாடசாலையில் அகதிகள் புனர்வாழ்வு கொடித்தினமும், 17ம் 18ம் திகதிகளில் மாணவர்களிடம் பேனை, பென்சில், அப்பியாசக் கொப்பிகள் சேகரிப்பதும், 20ம், 2 ம் திகதிகளில் பாடசாலையினை சூழவுள்ள பகுதிகளில் உடைகள் சேகரிப்பதும், 22ல் பாடசாலையில் உடைகள் சேகரிக்கவும் திட்டமிட்டுள்ளனர் சேகரிக்கப்பட்ட பொருட்களை ரோட்டரி கழகம், அரசாங்க அதிபர் ஊடாக இன்ரறக்ற் கழகத்தினால் மானிப்பாயிலுள்ள அகதி முகாமிற்கு வழங்கப்படும். [158]

## 41-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 19 - 07 - 1982 ★★★



உதிர்வு: 06 - 08 - 1992 ★★★

### செல்வி
### தம்பிராசா சர்விழி [கிளி]

(ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை மாணவி, ஆண்டு -- 5)

கண்ணீரே எங்கள் காணிக்கை ஆகட்டும்!

இங்ஙனம்
கண்ணீர் பூக்களைக் காணிக்கையாக்கும்
அப்பா, அம்மா, சகோதரர்கள், உறவினர்கள்.

கோட்டைக்காடு,
மல்லாகம். (எ 2426)

## 3ம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்: 06 | 09 | 1972



தாயக மண்ணில்: 15 | 09 | 1989

### வீரவேங்கை மதன்
### (விஜசித்தம்பி மதனதாஸ்)

வதைக்கின்ற தேசத் துரோகிகளை
மிதிக்கின்ற உணர்வோடு
மதனா நீ பள்ளியை மறந்தாய்
நண்பரை மறந்தாய் அதுமட்டுமா
உன் உறவை மறந்தாய்
நீர்வேலியல் வீரகாவியம் எழுதினாய்
நினைக்கும்போது நின் சாதனை கண்டு
வியக்குதையா மகனே!

இவருடன் நீர்வையில் வீரமரணமடைந்த கப்டன் அக்காச்சிக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்.

உனது நினைவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணன்

மதனதாஸ் வீதி,
நீர்வேலி வடக்கு. (சி-6808)

## இராசி பலன்

15-09-1992
செவ்வாய்க்கிழமை
(தமிழுக்கு ஆவணி 30)

திருதியை மு. ப. 11-45 வரை அச்சுவினி பி. இரவு 4-24 வரை இராகுகாலம் மாலை 3-03 முதல் 4-33 வரை சுபநேரம் காலை 10-53 முதல் 12-03 வரை அமிர்தசித்த யோகம்.

மேடம்: அறிவு நுட்பம். பல விதமான லாபங்கள்: தான தர்மம்.

இடபம்: வீண்சச்சரவு, கட்டுப்பாடுதல், குடும்பபிரிவு.

மிதுனம்: காரிய வெற்றி, தனலாபம், நண்பர் உதவி.

கடகம்: பந்துக்கள் உறவு, சயனசுகம், பாராட்டு.

சிங்கம்: தொழில் இடையூறு, வாக்குப்பகை, அலைச்சல்.

கன்னி: கெட்டவார்த்தை, வீண்குளப்பம், மானக்குறைவு

துலாம்: இடமாற்றம், மன மகிழ்ச்சி, புதிய திட்டம்.

விருச்சிகம்: சத்துருஜயம், நற்பணி, வெகுஜன மதிப்பு.

தனுசு: வழித தொல்லை, அவமதிப்பு, ஏமாற்றம்

மகரம்: இனசனப்பகை, அடிமைத்தனம், யோசனை.

கும்பம்: புதிய ஸ்தானம், வேலைப்பழு, பயணம்.

மீனம்: கண்டிப்பு. பிதா வன்மம், மனச்சுமை.

- ஜோஸ்யர்

# 'ஹெல உறுமய' தலைவர் கட்சியிலிருந்து இடைநிறுத்தம்

(கொழும்பு)

'ஹெல உறுமய' தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. திலக் கருணாரத்ன சுதந்திரக் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இதனை வன்மையாக கண்டித்துள்ள திரு. அநுரா பண்டாரநாயக்கா, சுதந்திரக் கட்சி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் செயற்திட்டத்தை தயாரிப்பதற்கு பதிலாக கட்சிக்குள் பல பிரச்னைகளை உருவாக்குவதிலேயே கவனம் செலுத்துவதாகவும் கூறினார்.

பின்கதவு வழியாக கட்சிக்குள் நுழையமுயலும் தனது சகோதரி சந்திரிகாவை அவர் கண்டித்ததோடு புதியவர்களை ஏற்றுபழையவர்களை அவமதிப்பதையும் கண்டித்துள்ளார்.

கட்சியின் தலைமைத்துவத்தை பண்டாரநாயக்கா குடும்பம் வைத்திருப்பதிலும் பார்க்க பொதுமக்கள் ஏற்பதையே தாம் விரும்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (கே)

# சுகாதார உதவிப்பணம் பெறப்படவில்லை

(உடுவில்)

உடுவில், இணுவில், சுன்னாகம், தெல்லிப்பழை, மல்லாகம், ஏழாலை போன்ற கிராமங்களில் வாழும் கஷ்டப்பட்ட குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைப்பதற்கென ஒதுக்கி வைக்கப்பட்ட உதவிப்பணத்தை சுகாதார பிரிவில் இதுவரை உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவில்லை என அறிவிக்கப்படுகின்றது.

இணுவிலுள்ள சுகாதார பணியகத்தில் சுமார் முப்பத்தேழு குடும்பங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் பெறப்படாமலுள்ளது.

இணுவில் ஆஸ்பத்திரியில் இயங்கிவரும் தெல்லிப்பழை-உடுவில் சுகாதார பணியகத்தில் இப்பணத்தை உரியவர்கள் அடையாளம் காண்பித்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# மனித உரிமைகள் குழு இந்தியாவர அனுமதிமறுப்பு

[புதுடில்லி]

இந்தியாவில் நடைபெறும் மனித உரிமை மீறலை கண்டித்துவரும், லண்டனிலுள்ள சர்வதேச மனிதஉரிமைகள் கண்காணிப்புக்குழு இந்தியா வர அனுமதிக்கமுடியாதென காங்கிரஸ்கட்சி தெரிவித்துள்ளது.

இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து பாரதீய ஜனதா கட்சி, மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சிகளும் இந்தக் குழு வருவதனை எதிர்த்து வருகின்றன.

காஷ்மீரில் இந்தியத் துருப்புக்கள் மனிதஉரிமை மீறல்களை புரிந்துவருவதாக ஏற்கனவே இந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. (வே)

## ★ சென்னை பேரணியில் பங்குபற்றியதற்கு

# வி. பி. சிங், ஜெயில்சிங் மீது காங்கிரஸ், ஜனதா கண்டனம்

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சி சென்னையில் நடாத்திய பேரணியிலும், கூட்டத்திலும் முன்னாள் இந்திய ஜனாதிபதி ஜெயில்சிங்கும் முன்னாள் இந்திய பிரதமர் வி. பி. சிங்கும் கலந்து கொண்டதை காங்கிரஸ் கட்சியும் ஜனதா கட்சியும் வன்மையாக கண்டித்துள்ளன.

தமிழகத்தில் பிரிவினைவாதத்தை முன்வைத்து, புலிகளுக்கு ஆதரவாக போராட்டம் நடாத்திவரும் பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிராககடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் இக்கட்சிகள் மத்திய அரசிடம் கோரியுள்ளன.

மேற்படி பேரணியில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படங்கள் எடுத்துச் செல்லப்பட்டும், அவருக்கும், தமிழீழத்திற்கும் ஆதரவாக சுலோகங்கள் எழுப்பப்பட்டபோதும் தமிழக அரசு இதற்கு எதிராக நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

இதன் மூலம் புலிகளுக்கும் ஜெயலலிதாவிற்கு மிடையில் இரகசிய தொடர்பு இருப்பது ஊர்ஜிதமாகிறது என்றும் ஜனதாகட்சி தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார். (சி)

# நாட்டைச் சீர்குலைக்க சில தீய சக்திகள் முயற்சி

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

உள்நாட்டுச் சக்திகள் வெளிநாட்டு வல்லரசுகளுடன் சேர்ந்து நாட்டைச் சீர்குலைக்க முயற்சி செய்து வருகின்றன என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா குற்றம் சாட்டியுள்ளார்.

தென்பகுதியில் இடம்பெற்ற பொதுவைபவமொன்றில் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

இச்சக்திகளை தமது தீய நோக்கத்தை அடைவதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார். (ரி)

# மாகாணசபைத் தேர்தல் அடுத்த வருடம்

(கொழும்பு)

இன்னும் எட்டுமாதங்களில் மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

இத்தேர்தலுக்காக தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தயாராகிக் கொண்டிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது.

ஐந்துவருடங்களின் பின்னர் இச்சபைகள் கலைக்கப்பட வேண்டும் என்பது சட்டவிதியாகும். எனவே அடுத்த வருடம் இத்தேர்தல்கள் நடைபெறும். (ரி)

## இந்தியா கடனுதவி

(கொழும்பு)

இலங்கைக்கு இந்தியா புதிய கடனுதவிகளை வழங்கவுள்ளது.

சிறுகைத்தொழில் துறைக்கு தேவையான பொருள்களை இறக்குமதி செய்ய இலங்கைக்கு ஆறுகோடி ரூபாவை இந்தியா வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

# மைத்திரியிடம் கட்சித் தலைமையை சிறிமா ஒப்படைக்கவேண்டும்

[கொழும்பு]

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துவிட்டு கட்சித்தலைமையை மைத்திரிபால சேனநாயக்காவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தரும், முன்னாள் சிரேஷ்ட அமைச்சருமான திரு. மைத்திரிபாலசேனநாயக்கா 45 வருடங்கள் அரசியலில் ஈடுபட்டதைக் கௌரவிக்கும் முகமாக விரிவான திட்டங்களை கட்சித்தலைமை தற்போது மேற்கொண்டுவருகிறது.

இது தொடர்பாக கருத்து வெளியிடுகையிலே கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளனர். (ரி)

# தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி ஏற்படுத்த 4 அம்சத் திட்டம்

(புதுடில்லி)

தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் ஆட்சியை ஏற்படுத்தும் வகையில் கட்சியில் கோஷ்டிப் பூசல்களை ஒழிப்பது, கட்சித் தேர்தல்களை நடத்துவது தொடர்பான நான்கு அம்ச திட்டமொன்றை பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தயாரித்துள்ளார்.

தமிழக இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு தேர்தலை நடத்துவது, அதுவரை இடைக்கால ஏற்பாடு ஒன்றைச் செய்வது இரு கோஷ்டிகளின் தலைவர்களில் ஒருவரை அகில இந்திய இந்திரா காங்கிரஸின் செயலாளராக நியமனம் செய்வது, தமிழகத்தில் நான்கு ஆண்டுகளில் காங்கிரஸ் ஆட்சியை ஏற்படுத்தும் நோக்குடன் இரு கோஷ்டிகளும் செயற்படுவது ஆகியவை நரசிம்மராவ் விடுத்திருக்கும் நான்கு அம்சத் திட்டங்கள் எனக் கூறப்படுகிறது. (ரி)

## கொழும்பிலிருந்து

# அகதிகளைப் பலவந்தமாக அனுப்ப முயற்சி?

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள தமிழர்களை பலவந்தமாக அவர்களின் சொந்த இடங்களுக்கு திருப்பியனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இவர்களை திருப்பியனுப்புவது தொடர்பாக அந்தந்த மாவட்டங்களிலுள்ள அரச அதிபர்களுடன் புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் கலந்தாலோசிக்கவுள்ளனர்.

கொழும்பில் தமிழர்கள் தஞ்சமடைந்திருக்கும் அகதி முகாம்களை இம்மாத இறுதியில் மூடிவிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது தெரிந்ததே. (ரி)

# மாணவர் மீதான அரசியல் வன்முறைகளுக்கு கண்டனம்

(ஜகர்த்தா)

சிறிலங்காவில் மாணவர்களுக்கு எதிராக நடத்தப்படும் அரசியல் வன்முறைகளுக்கு உலக இளைஞர் சம்மேளனம் தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இந்தோனேஷியாவில் அண்மையில் நடைபெற்ற மாநாடு ஒன்றிலே இந்தக் கண்டனம் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

16 நாடுகளிலிருந்து 55பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

குற்றச்சாட்டுக்கள் எதுவுமின்றி சிறை வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டுமென்றும் இளைஞர்கள் திடீர் திடீரென காணாமற் போவதற்கான பொறுப்பை அரசே பொறுப்பேற்க வேண்டுமென்றும் அம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (ரி)

# நுண் அறிவுப் போட்டி: 1ம் இடம் பெற்றவர்கள்

(பருத்தித்துறை)

சமூகசேவையாளர் அமரர் அம்பலவாணர் ஞாபகார்த்தமாக புலோலியில் நுண்அறிவுப் போட்டியொன்று பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்டது.

தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்நுண் அறிவுப் போட்டிகளை வடமராட்சிக் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை ஆரம்பித்து வைத்தார்.

இப்போட்டிகள் ஆண்டு 5 தொடக்கம் ஆண்டு 13 வரையான மாணவர்களுக்கு நடாத்தப்பட்டது. இந் நுண்ணறிவுப் போட்டியில் முதலாம் இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் விபரம் வருமாறு 5-ம் ஆண்டு - சரவணபவான் ரமணன், தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயம், 6-ம் ஆண்டு: ஸ்ரீஸ்கந்தராஜா அகிலன், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி. 7-ம் ஆண்டு: பஞ்சகல்யாணி செல்லத்துரை, பருத்தித்துறை மெதடிஸ்த பெ. உ. கல்லூரி. 8-ம் ஆண்டு: சுப்பிரமணியம் கண்ணன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி. 9-ம் ஆண்டு: துளசிமதி சண்முகராஜா, பருத்தித்துறை மெதடிஸ்த பெ. உ. கல்லூரி, 10ம் ஆண்டு: வாசுகி ஜெயநாயகம், பருத்தித்துறை மெதடிஸ்த பெ. உ. கல்லூரி 11ம் ஆண்டு இராஜரட்ணம் வரதராஜா, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, 13-ம் ஆண்டு விஜயரேகா தில்லையம்பலம், பருத்தித்துறை மெதடிஸ்த த பெ. உ. கல்லூரி, தனபாலசிங்கம் தயாபரன், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி 52)

## பாட்டாளி மக்கள் கட்சிமீது நடவடிக்கை எடுக்கவேண்டும்

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் பாட்டாளி மக்கள் கட்சி மீதும் அதன் ஆதரவு கட்சியின் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாரதீய ஜனதா கட்சியின் தமிழகப்பிரிவு கேட்டுள்ளது.

சென்னையில் பாட்டாளி மக்கள் கட்சி கூட்டங்களில் புலிகளுக்கு ஆதரவாக பேசப்பட்டதாகவும் அதனை தாங்கள் கண்டிப்பதாகவும் இக்கட்சியின் செயலர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளையில் பாட்டாளி மக்கள் கட்சியின் ஊர்வலத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படம் ஏந்திச் சென்றதைதடுக்காதது, முதல்வருக்கும் புலிகளுக்கும் உடன்பாடு இருப்பதைக் காட்டுவதாக உள்ளது என டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி குறிப்பிட்டுள்ளார். (கே)

# வீதிக்கடைகளில் மண்ணெண்ணை

[உடுவில்]

மண்ணெண்ணை மீண்டும் வீதிகளில் வியாபாரத்துக்கு வந்துள்ளது.

மண்ணெண்ணை வியாபாரிகள் லீற்றர் 40 ரூபாவாக விற்பனை செய்யலாம் என காவல்துறையினர் அறிவித்ததை அடுத்து மீண்டும் மண்ணெண்ணை வீதியோரக் கடைகளில் காட்சியளிக்கின்றது

உடுவில், மருதனுமடம், சுன்னாகம் மற்றும் இடங்களில் லீற்றர் 40 ரூபாவாகவும், போத்தல் 30 ரூபாவாகவும் மண்ணெண்ணை விற்கப்படுகின்றது. (109)

# இனப் பிரச்னைக்கு ஒருதலைப்பட்சமான தீர்வு காணப்படமாட்டாது

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னைக்கு ஒருதலைப்பட்சமான தீர்வு காணப்படமாட்டாதென ஜனாதிபதி பிரேமதாஸா அறிவித்துள்ளார்.

இப்பிரச்னை சகல கட்சிகளினதும் இணக்கத்துடனேயே தீர்த்து வைக்கப்படும். இப்பிரச்னைக்கு ஒருதலைப்பட்சமான தீர்வை எதனையும் நாடும் எண்ணம் அரசுக்கு இல்லை என்றும் ஜனாதிபதி கூறினார். (சி)

# ஏற்றுமதி உற்பத்திக்கு ஊறு விளைவித்தால் சிறைத் தண்டனை

(கொழும்பு)

ஏற்றுமதி உற்பத்தி நிறுவனங்களின் பணிகளுக்குஊறு விளைவித்தால் சிறைத்தண்டனை விதிக்கப்படுமென அரசு அறிவித்துள்ளது.

அவசரகால சட்டத்தின் கீழ் இந்த அறிவிப்பை ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார்.

ஏற்றுமதிக்கான பொருட்களின் உற்பத்தி தொழில்கள் பாதிப்பின்றி சீராக நடைபெறுவதை உறுதிப்படுத்துமுகமாகஅரசு பொதுஜனபாதுகாப்பு சட்டத்தின்கீழ் மேற்படி அறிவிப்பை கடந்த 22ம் திகதி முதல் அமுலுக்கு கொண்டுவந்துள்ளது. (சி)

# எம்.பி. பதவியில் மைத்திரி உலக சாதனை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினராக தொடர்ச்சியாக 45 வருடங்கள் இருந்து சுதந்திரக் கட்சி எம்.பி. திரு. மைத்திரிபால சேனநாயக்கா சாதனை புரிந்து வருவதை கௌரவித்து மதவாச்சியில் விழாக்கள் நடாத்தப்பட்டு வருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான இவர் இலங்கையின் முதலாவது நாடாளுமன்றிற்கு 1947 - ம் ஆண்டு செப் 1-ம் திகதி தெரிவு செய்யப்பட்டது முதல் தொடர்ச்சியாக 45 வருடகாலம் மதவாச்சி தொகுதியில் பிரதிநிதித்துவம் செய்து வருகிறார்.

இது ஒரு உலக சாதனை எனக்கருதப்படுகிறது. (சி)

# வடபகுதி மாணவர்களுக்கு இரு வாரங்களில் தபால் அடையாள அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

தபால் தலைக்களத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அடையாள அட்டைகள் இனிமேல் வடபிராந்திய தபால் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளது.

இதற்கான அனுமதி வடபிராந்திய பிரதி மா தபாலதிபர் திரு. எஸ் எம் சேது காவலருக்கு தபால் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதுவரை காலமும் தபால அட்டைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் விண்ணப்பங்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டு, பின்பு அங்கிருந்தே தபால் அடையாள அட்டைகள் பல மாதங்களின் பின்பே உரியவர்களுக்கு கிடைக்கு வந்தன.

இனிமேல் வடபகுதியிலிருந்து விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு இருவாரங்களுக்கிடையில் புதிய தபால அடையாள அட்டைகள் வழங்கப்படுமென்றும் வடபகுதி தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (வி)

# சென். மேரிஸ் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

திருவள்ளுவர் சனசமூகநிலையத்தினால் நடாத்தப்பட்ட 7 பேர்கொண்டஉதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் கழகம் சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

நேற்று சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் சென். மேரிஸ் அணி குருநகர் பாடும் மீன் அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வென்று சாம்பியனாகியது (சி)

# பட்டாசுத் தொழிற்சாலை தீ விபத்தில் 16 பேர் பலி

(சென்னை)

சிவகாசிக்கருகில் நாராயணபரத்திலுள்ள பட்டாசுத் தொழிற்சாலையில் நேற்று பிற்பகல் ஏற்பட்ட தீவிபத்தில் குறைந்தது 16 பேர் பலியானார்கள். 9பேர்காயமடைந்தனர்

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

வெடிச்சத்தம் ஐந்து கிலோமைல் தூரம்வரை கேட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. சத்தம் கேட்டு அயல் கிராமத்திலுள்ளோர் அங்கு கூடி பல உதவிப் பணிகளைச் செய்தனர். (கே)

## அரசின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் ஒரு பயணங்களும் மேற்கொளளப்பட்டன.

ஆனால் அகேக கப்பலின் இந்திய பிரஜைகளையும் திருப்பி அனுப்ப இலங்கை அரசு முயற்சிக்கும். இதனை கப்பல் சேவை நிறுத்தப்பட்டது.

தற்போது சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தப் பிரகாரம் இந்திய பிரஜா உரிமைபெற்ற இந்திய வம்சாவழியினர், காலம் கடந்ததால் இந்தியா திரும்ப விரும்பவில்லை. இவர்களை சட்டாயப்படுத்தி நாடுகடத்த முடியாத நிலையில் இலங்கை அரசும் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (கே)

## அகதிகள்

(1ம பக்கத் தொடர்ச்சி)

படும் நெருக்குகள் மற்றும் அவமானத்தாலேயே அவர்கள் நாடு திரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது

அகதிகள் சொந்த விருப்பத்தின் பேரிலேயேதான் நாடு திரும்புகிறார்கள் என்பதை கண்காணிக்க ஐ. நா. வின் அகதிகள் பராமரிப்பு பிரதிநிதிகள் இருப்பதனால் இந்திய அதிகாரிகள் மறைமுகமாக முகாம்களில் அகதிகளின் வாழ்க்கையை மோசமாக்குவதால், அங்கு இருப்பதிலும் பார்க்க சொந்தஊர் போவது நல்லது என்ற எண்ணம் அகதிகளின் உள்ளத்தில் தோன்றி விடுகிறது.

இப்படியான நிலைமையையே தமிழக அரசு அதிகாரிகள் அகதி முகாம்களில தோற்றுவித்து வருவதாக அங்கிருந்து இலங்கை திரும்பும் அகதிகள் சிலர் தெரிவித்துள்ளனர். (கே)

# கல்முனைப்பகுதியில் ராணுவ நடமாட்டம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்முனை பூவரசந்தீவுப் பகுதியில் நேற்றுக்காலை பெரும் எண்ணிக்கையில இராணுவத்தினர் காணப்பட்டதையடுத்து அப்பகுதிக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற யாழ்ப்பாணக் கடலோரப் பகுதி மீனவர்கள் மீன்பிடிப்பதை விட்டுவிட்டு உடன் கரை நோக்கித் திரும்பியுள்ளனர்.

திரும்பி வந்த மீனவர்கள் தெரிவித்த தகவலின்படி கல்முனைப் பகுதியிலிருந்து வந்த இராணுவத்தினர் அப்பகுதியைச் சுற்றி காவலரண்களை அமைத்துக்கொண்டிருந்ததாகவும் பல சிறிய படகுகளில் அப்பகுதிக்கு வந்து போய்க்கொண்டிருந்ததாகவும் தெரிவித்தனர், (56)

# பதவி ஏற்குமாறு பணிப்பு

(கொழும்பு)

பிரதேச செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள அரசு அதிகாரிகள் இன்று 15ம் திகதிக்குள் பதவி ஏற்கத் தவறினால் அவர்களது பதவி காலியாகுமென அரசு எச்சரித்துள்ளது.

பதவி ஏற்காத விடத்து தமதுபதவிகளிலிருந்து தாமாகவே விலகிக்கொண்டவர்களாக கருதப்படுவார்களென உள்விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (சி)

## வவுனியா

1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை வவுனியா பொலிஸ் பிரிவில் தெற்கு இலுப்பைக்குளத்தில் இச்சம்பவம் நடைபெற்றது. சகோதரிகளில் மூத்தவரின் முதுகில் பட்ட சன்னம், அவரது மார்பைத் துளைத்துச் சென்று தங்கையின் மார்பில் தைத்தது.

இது குறித்துப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (சி)

# யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை நேற்று ஆரம்பம்

(திருநெல்வேலி)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகின இப்பரீட்சை தொடர்ந்து அடுத்த மாதம் ஐந்தாம் திகதி வரை நடைபெறும் என பல்கலைக்கழக பரீட்சைப் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்றைய பரீட்சைக்கு அதிகளவு மாணவர்கள் தோற்றினர்கள் முதல்முறையாக இம்முறை வெளிவாரிப் பரீட்சைகள் இங்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும் யாழ். மாவட்ட மாணவர்கள் பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைக்கு மட்டும் தோற்றிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (157)

# மனித உரிமை மீறலை அரசு சகித்துக்கொள்ளாது

## நரசிம்மராவ்

(புதுடில்லி)

மனிதஉரிமை மீறலை தமது அரசு சகித்துக்கொள்ளாதென்று நரசிம்மராவ் இவ்வாறு கூறினார்.

றம் பஞ்சாப்பிலும், காஷ்மீரிலும் மனிதஉரிமை மீறல்களிலீடுபட்ட 240 ராணுவத்தினர் மீது நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாகவும் இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

நேற்று புதுடில்லியில் மனித உரிமையை காக்கும் கமிஷன் ஒன்றை அமைப்பதற்கான கூட்டத்திலேயே பிரதமர் இவ்வாறு கூறினார். இக்கூட்டத்தில் 22 மாநிலங்களின் முதலமைச்சர்களும் கலந்துகொண்டனர். (கே)

## இன்று தபால்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று திங்கட்கிழமை காலை, யாழ். தபாலக ஊழியர்களினால் குமண கப்பலில் இருந்து தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டன.

நாளை முதல் வெளியூர்த் தபால்கள் விநியோகிக்கப்படுமெனத் தபாலக அதிகாரிகள் தெரிவித்தனர். (157)

## வலி-மேற்கிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

அரச ஊழியர்கள் முக்கிய அரச தஸ்தாவேஜுகளை தங்கள் இல்லங்களுக்குச் சென்று எடுத்துவர கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி அளித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகத்துடன் கேட்டுக்கொண்டதற்கிணங்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலம் அவர்களை அங்கு கூட்டிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஆகையால் சம்பந்தப்பட்ட அரச ஊழியர்கள எதிர்வரும் 18-ந் திகதிக்கு முன்னர் தங்கள் முழு விபரத்தையும் யாழ். செயலக மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. சவைத்திலிங்கத்திடம் சமர்ப்பிக்கும்படி மாவட்ட பிரதி ஆணையாளர் அறிவித்துள்ளார். (வி-71)

## யாழ். குடாநாட்டில்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது வடக்கு-கிழக்கிலும், இந்தியாவிலுமிருந்து தாயகம் திரும்பும் அகதிகளைப் பராமரிக்க வருடமொன்றுக்கு 2,500 கோடி ரூபா செலவிடப்படுகிறது.

இந்நிலையில் மேலும் ஒரு பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொளளப்படும் பட்சத்தில் பல இலட்சம்பேர் அகதிகளாக வேண்டிய நிலை ஏற்படும். இதன் மூலம் பல கோடி ரூபா மேலதிக செலவாகுமென அரசுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளதால் இவ்வாறான தொரு நிதி நெருக்கடியை ஏற்படுத்த அரசு விரும்பவில்லை.

மேலும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து அகதிகளை பெருக்கிக்கொள்ளவும் இராணுவத்தினரை தொடர்ந்து பலியிடவும் அரசு விரும்பவில்லை என சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவர் கூறினார்.

பாரிய இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிப்பது இன்றைய பொருளாதார நிலையில் சாத்தியப்படாது என்றும் அவர் கூறினார். (சி)

## தியாகி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சுழற்சி முறையில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

இந்த அடையாள உண்ணாவிரத அனுஷ்டிப்பு காலத்தில் தியாகி திலீபனின் சொற்பொழிவுகள், கவிதைவாசிப்பு, வில்லிசை நிகழ்ச்சிகள் ஒளிப்பட கண்காட்சி போன்றனவும் இடம்பெறும்

## நிவாரணம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நிதி நெருக்கடி காரணமாக ஏனைய நிவாரணங்களை வழங்க முடியாதிருப்பதாக அத்தியாவசிய சேவைகளின் பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உலர் உணவு நிவாரணம் தவிர ஏனைய நிவாரணங்கள் வழங்க வழியில்லை என்றும் அவர் தெரிவித்தார். சி

## திறைசேரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பராமரிப்பு செலவுகள் அதிகரித்து வருவதாலும் பாரிய ராணுவ தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதி வசதிகளை வழங்க முடியாத ஒரு இக்கட்டான நிலை திறைசேரிக்கு ஏற்பட்டிருப்பதாக அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது

இதனையடுத்தே பாரிய இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டாமென பாதுகாப்பு அமைச்சை அரசு கேட்டுக் கொண்டுள்ளதாக அறியவந்துள்ளது. (இ)

## வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி]

இவர்களுக்கு வருடாந்தம் 500 வீடுகள் வழங்கப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

புலிகளின் பல்வேறுவிதமான தாக்குதல்களினால மேற்படி எண்ணாயிரம் படைவீரர்களும் ஊனமுற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

ஊனமுற்ற படையினரின் எதிர்காலத்திற்கு பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். (சி)

## நிவாரண வெட்டை

[1ம்பக்கத் தொடர்ச்சி]

இணையம் மகஜர் ஒன்றை ஜனாதிபதிக்கும் வெளிநாட்டு தூதரகங்களுக்கும் அனுப்பியுள்ளது.

அரசுமேற்கொண்டுள்ள நிவாரண வெட்டை உடன் மறுபரிசீலனை செய்யும்படி இணையம் மகஜர் மூலம் கேட்டுள்ளது.

இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிவரும் வெளிநாடுகளுக்கும் அரசின் நிவாரண வெட்டை தெரியப்படுத்தியுள்ளதாகவும் இணையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தார் யாழ்ப்பாணம் [illegible] வீதி [illegible] அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10330/